முதன்மை மாவட்ட நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.

O.S. No.170/2013

08.08.2019

வா.சா.2 : பெயர் :கஜேந்திரன்

மேற்படி சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

7,8 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :

கந்தசாமியை எனக்கு தெரியாது. எனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் கொத்தம்பட்டியில் உள்ளது. அந்த சொத்துக்களின் சர்வே எண் தெரியும். சர்வே எண்.185/1. அந்த சொத்துக்களுக்கு சமீபத்தில் வில்லங்க சான்றிதழ் வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை. சர்வே எண்.185/1 ல் 1.20 ஏக்கர் இடம் உள்ளது. பட்டா என் தகப்பனார் பெயரில் உள்ளது. சொத்துக்களை நான் தான் அனுபவிக்கிறேன். அதற்கான பட்டா மற்றும் வாய்தாக்களை தாக்கல் செய்ய முடியும். வாதி என்னுடைய சொத்து பொறுத்து வழக்கு நடப்பதால் சாட்சி சொல்ல வேண்டுமென்று கூப்பிட்டார். நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்த பிறகு வில்லங்கம் பார்த்தேனா என்றால் இல்லை. சர்வே எண்.185/1 ல் நீளம் மற்றும் அகலம் தெரியாது. நிலம் மானாவாரியாகும். நான் தற்போது விவசாயம் எதுவும் செய்யவில்லை. கல்லூரிக்கு வடக்கில் என்னுடைய நிலம் உள்ளது. என்ன வழக்கு என்று நான் கேட்கவில்லை. சர்வே எண்.185/1 ஐ பொறுத்த பட்டா தற்போது யார் பெயரில் உள்ளது என்று பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. என்னுடைய சொத்தைப் பொறுத்து நான் எந்த ஆவணமும் எழுதிக் கொடுக்கவில்லை. நான் முதல்விசாரணை சாட்சியம் அளித்தபிறகாவது அந்த கந்தசாமி யார் என்று விசாரித்தேனா என்றால் இல்லை. சர்வே எண்.185/1 ஐ பொறுத்து நான் நீதிமன்றத்தில் வழக்கு எதுவும் போடவில்லை. கந்தசாமிக்கும் சர்வே எண்.185/1 க்கும் என்ன சம்பந்தம் என்று எனக்கு தெரியாது. எனக்கும், 1 ம் பிரதிவாதி அறக்கட்டளைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. நான் முதல் பிரதிவாதியின் கல்லூரி மீது நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. சர்வே எண்.185/1 எனது பூர்வீக பாத்தியம். சர்வே 185/1 ஐ பொறுத்து பட்டா தவிர வேறு ஆவணங்கள் உள்ளதா என்றால் எனது தகப்பனாரை தான் கேட்க வேண்டும். என் தகப்பனாருக்கு கந்தசாமியைப் பற்றி தெரியுமா என்றால் தெரியாது.